குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 61/2017

அ.சா. 5

2025-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 5-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயா | தொழில் | |
| தந்தை பெயர் | சுப்பிரமணி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 02.00 மணி,

Accused A1 Vijayavarman, A2 Jayakumar Present. A3 Thangavel Died and Charge Abated. Advocate Mr. M.Raja present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் நல்லகவுண்டம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சுமார் 7-8 வருடங்களுக்கு முன்பு எனது தம்பி பன்னீர் அ.சா.1 வீட்டருகே சத்தம் கேட்டது. நான் அங்கு சென்று பார்த்தபோது அவர் வீட்டு கதவின் பக்கம் இருந்த கண்ணாடி உடைந்திருந்தது. அவரது இருசக்கர வாகனம் கீழே சாய்ந்து கிடந்தது. அ.சா.1 பன்னீர் நாற்காலியில் அமர்ந்திருந்தார் அவருக்கு தலையில் இரத்தம் வந்து அவர் அணிந்திருந்த பணியளில் இரத்தம் நனைந்திருந்தது.

2. நான் அவரிடம் என்ன பிரச்சனை என்று கேட்டதற்கு எதிரிகள் மூவரும் வந்து கண்ணாடியை உடைத்து அவரை அடித்துவிட்டதாக சொன்னார். நான் எதிரிகளை அங்கு பார்க்கவில்லை. நான் வருவதற்குள்ளாக அவர்கள் சென்றுவிட்டார்கள். அதன்பின்பு சிறிது நேரம் அங்கு இருந்து விட்டு எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் 12.00 மணியளவில் போலிசார் வந்து சம்பவம் நடந்த இடத்தில் விசாரணை செய்தார்கள். என்னையும் விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.26 18:01:36 +0530

**(அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னுடன் கலைவாணி என்பவரும் கையொப்பம் போட்டார். போலிசார் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. நான் சுமார் 9 வருடங்களுக்கு முன்பு ஒரு நான் சத்தம் கேட்டு அ.சா.1 வீட்டிற்கு சென்றதாக கூறியுள்ள நிலையில் நான் சென்ற போது அங்கு அ.சா.1 யை தவிர்த்து வேறு யார் இருந்தார்கள் என்றால் ஊர் மக்கள் இருந்தார்கள். எதிரிகள் தான் அ.சா.1 யை அடித்தாக அ.சா.1 என்னிடம் சொல்லித்தான் தெரியும் என்றால் சரி. இவ்வழக்கு தொடர்பாக காவல் நிலையத்திற்கோ மருத்துவமனைக்கோ செல்லவில்லை என்றால் சரி.

4. சம்பவத்திற்கு மறுநாள் எந்த போலிசார் எந்த போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் வழக்கு சம்மபவம் நடைபெற்றது பற்றி எழுதியிருந்தார்கள். நான் கண்ணாடி அணியாததால் எனக்கு தெரியவில்லை. காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.10 மணி.**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.26 18:01:39 +0530